ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ

அதி விசேஷமானது

අංක 2402/21 - 2024 සැප්තැම්බර් මස 21 වැනි සෙනසුරාදා - 2024.09.21

*2402/21 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்***

53 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 53 ஆம் பிரிவினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் பரிந்துரைகளை பரிசீலித்த முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பேரில், இந்த கட்டளையின் மூலம் பின்வருவனவற்றை குறிப்பீடு செய்கிறேன் -

(அ) 2024.09.13 ஆந் திகதிய 24/1923/631/050 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அமைச்சரவையானது, இங்கே அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட நபரின் வியாபாரத்தை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வியாபாரமாக நியமிப்பதற்கு அங்கீகாரம் அளித்துள்ளது;

(ஆ) அத்தகைய வியாபாரத்தை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வியாபாரமாக கருதுவதற்கான காரணம் இங்கே அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளது;

(இ) இச்சட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் இங்கே அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி இருக்க வேண்டும்; அத்துடன்

(ஈ) குறிப்பிடப்பட்ட சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் இங்கே அட்டவணை IV இல் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் செயல்படத் தொடங்குவதும் நடைமுறையில் இல்லாதொழிதலும் வேண்டும்.

**ரணில் விக்கிரமசிங்க,**
முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர்

கொழும்பு,
2024, செப்தெம்பர்

**அட்டவணை I**
**செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வியாபாரமாக நியமிக்கப்பட்ட வியாபாரத்தின் விபரங்கள்**

| | |
|---|---|
| 1. அதிகாரமளிக்கப்பட்ட நபரின் பெயர் | ஐ எஃப் சீ கழம்பு 1 (பீவீஉ) லிமிட்டெட் (IFC COLOMBO 1 (PVT) LTD) |
| 2. உரிம இல. | 240715226211 |
| 3. உரிமம் வழங்கப்பட்ட திகதி | 2024, ஓகத்து 21<br>வியாபாரம் தொடங்கும் திகதியானது உரிமம் வழங்கப்பட்ட நாளிலிருந்து 6 மாதங்களுக்குள் இருக்க வேண்டும் (2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அதிகாரமளிக்கப்பட்ட நபர்களின் பதிவுசெய்தல், உரிமம் வழங்குதல், அதிகாரமளித்தல் மற்றும் ஏனைய அங்கீகாரங்களுக்கான ஒழுங்குவிதிகளின் 27 ஆம் ஒழுங்குவிதியைப் பார்க்கவும்) |
| 4. கரைகடந்த கம்பனி பதிவு இல. | PCC00305642 |
| 5. செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வணிகத்தின் வகைப்பாடு | செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வியாபாரம் |
| 6. விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகளுக்கான தகவுடமை | IFC COLOMBO 1 (PVT) LTD என்பது செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வியாபாரமாக மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளதுடன் செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரமாக நியமிக்கப்படுவதற்கு தகுதி பெறமாட்டாது. |
| 7. தகைமை தகுதி விதி | 2023, ஓகத்து 04 ஆம் திகதியுடைய 2343/60 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கான வழிகாட்டுநெறிகள்) ஒழுங்குவிதிகளின் 2(அ) ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிவிதிகள். |
| 8. ஏற்புடைய விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்புத் திட்டம் | 2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கான வழிகாட்டுநெறிகள்) ஒழுங்குவிதிகளின் 3(1) (அ) ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டம். |
| 9. செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வியாபாரம் செல்லுபடியாவதற்கான நிபந்தனைகள் | இந்த வர்த்தமானி வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஆறு (06) மாத காலத்திற்குள் மேலே குறிப்பிடப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட நபர் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவுடன் இல. 1-01-02, 1-02-04 மற்றும் 1-02-05 கொண்ட காணித் துண்டுகளுக்கான காணி குத்தகை ஒப்பந்தத்தை மேற்கொள்ளத் தவறினால் செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வியாபார அந்தஸ்த்து செல்லுபடியற்றதாகிவிடும். |

## அட்டவணை II

### செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வியாபாரமாக கருத்தில் கொள்வதற்கான காரணம்

*2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் குறிக்கோள்கள், மேற்படி சட்டத்தின் பிரிவு 53(5) இல் கூறப்பட்டுள்ளவாறு தேசிய நலனை அல்லது தேசிய பொருளாதாரத்தின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு, கொழும்பு துறைமுக நகரத்தை நிறுவுவதன் வெற்றியை உறுதி செய்வதற்காக, வணிகத்தை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை வியாபாரமாக நியமிப்பது தொடர்பாக பரிசீலிக்கப்பட்டது.*

IFC COLOMBO 1 (PVT) LTD, *இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும், இது* CHEC Port City Colombo (Private) Limited *நிறுவனத்தின் துணை நிறுவனமாகும். இது* China Harbour Engineering Company (CHEC) *க்கு சொந்தமானது.* CHEC *ஒரு பெரிய உலகளாவிய ஒப்பந்ததாரர் மற்றும்* China Communications Construction Company Limited (CCCC) *நிறுவனத்தின் துணை நிறுவனமாகும்.* CCCC *நிறுவனம்* Fortune Global *(2021) 500 இல் 61 ஆவது இடத்தைப் பிடித்துள்ளதுடன்* ENR *இன் 2023 சிறந்த 250 உலகளாவிய ஒப்பந்ததாரர்களின் வரிசையில் பட்டியலிடப்பட்டுள்ளது.* CCCC *ஆனது 145 நாடுகளில் இயங்குவதுடன், ஹாங்காங் மற்றும் ஷாங்காய் பங்குச் சந்தைகளில் பட்டியலிடப்பட்டுள்ளது.*

IFC COLOMBO 1 (PVT) LTD *நிறுவனத்தினை நிறுவுவதன் பின்னணியில், கொழும்புத் துறைமுக நகரத்திற்குள் ரியல் எஸ்டேட்-ஆதன விற்பனை மேம்பாட்டை மேற்கொள்வது, வியாபார, சில்லறை மற்றும் குடியிருப்பு கூறுகளை செயல்நுணுக்க ரீதியாக ஒருங்கிணைத்து ஒரு செழிப்பான மற்றும் நிலையான ரியல் எஸ்டேட் சூழலை உருவாக்கும் நோக்குடன் உள்ளது.*

IFC COLOMBO 1 (PVT) LTD *நிறுவனத்தின் இலக்குச் சந்தையானது, 2023 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர (அபிவிருத்திக் கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளில் காட்டப்பட்டுள்ள விதிமுறைகளின்படி, தெற்காசியாவிலும் உலகெங்கிலும் உள்ள முதலீட்டாளர்கள் மற்றும் தொழில்முனைவோர்களை உள்ளடக்கிய கலப்பு பயன்பாட்டு நிலத்தை 12,561.60 சதுரமீட்டர் பரப்பளவில் 1-01-02 நிலம், 16,406.35 சதுர மீட்டர் பரப்பளவில் 1-02-04 குடியிருப்பு நிலம் மற்றும் 13,945.87 சதுர மீட்டர் பரப்பளவில் 1-02-05 குடியிருப்பு நிலம் ஆகியவற்றை குத்தகைக்கு எடுத்து மேம்படுத்துவதாகும்.* IFC COLOMBO 1 (PVT) LTD *ஏறக்குறைய ஐ.அ.டொ. 300 மில்லியன் (ஒரு காணித் துண்டுக்கு ஐ.அ.டொ. 100 மில்லியன்) முதலீடு செய்ய உத்தேசித்துள்ளதுடன், நிறுவனம் முதல் ஆண்டில் 50 பணியாளர்களை பணியமர்த்த திட்டமிட்டுள்ளது மற்றும் நிறுவனத்தின் வர்த்தக அலுவலகம் செயல்படத் தொடங்கிய 5 ஆண்டுகளுக்குள் குறைந்தபட்சம் 800 சதுரமீட்டர் தளம் தேவைப்படும்.* IFC COLOMBO 1 (PVT) LTD *இன் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சுற்றுலா, நகர்ப்புற வசதிகள் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம், வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஈர்ப்பதுடன் கொழும்புத் துறைமுக நகரத்தின் சர்வதேசத் தரத்தை மேம்படுத்தும்.*

*கொழும்புத் துறைமுக நகர (அபிவிருத்திக் கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகள் மற்றும் 2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புகளை வழங்குவதன் மீதான வழிகாட்டுநெறிகள்) ஒழுங்குவிதிகள் என்பவற்றின்படி,* IFC COLOMBO 1 (PVT) LTD *ஒரு நிலத்திற்கு அல்லது துணைப் பிரிக்கப்பட்ட நிலத்தில் குறைந்தபட்சம் ஐ.அ.டொ. 100 மில்லியன் முதலீடு ஒரு சார்பு முதலீட்டு அளவுகோலைச் சந்திக்கிறது.*

## அட்டவணை III

### சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்படுகின்ற விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள்

| *சட்டத்தின் அட்டவணை II இன் கீழ் பட்டியலிடப்பட்ட சட்டங்கள்* | *வழங்கப்பட்ட விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புக்கள்* |
|---|---|
| *1. 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்* | (அ) அனைத்து வருமானம், இலாபங்கள் மற்றும் பகிர்ந்தளிக்கப்படுகின்ற பங்கிலாபங்கள் முதல் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு இந்தச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்படும் |
| | (ஆ) மேற்கொள்ளப்படுகின்ற அனைத்துக் கொடுப்பனவுகளும் முதல் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு இந்தச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிறுத்திவைத்தல் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும் |

| சட்டத்தின் அட்டவணை II இன் கீழ் பட்டியலிடப்பட்ட சட்டங்கள் | வழங்கப்பட்ட விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புக்கள் |
|---|---|
| | (இ) மேற்கூறிய இருபத்தைந்து ஆண்டு காலம் முடிவடைந்த பிறகு, இந்தச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையில் உள்ள நிறுவன வரி விகிதத்தில் இருந்து 50% ஊக்குவிப்புகள் பத்து வருட காலத்திற்கு வழங்கப்படும். |
| 2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரம் தொடர்பான பொருட்கள் மற்றும் சேவைகளின் அனைத்து இறக்குமதிகள் மற்றும் உள்நாட்டு கொள்வனவுகள், இந்தச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வரிகளிலிருந்து விலக்கு அளிக்கப்படும். |
| 3. 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் நிதிச்சட்டம் | இந்தச் சட்டத்தின் அனைத்து ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். |
| 4. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க இலக்க நிதிச்சட்டம் | இந்தச் சட்டத்தின் அனைத்து ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். |
| 5. 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க கலால் வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரம் தொடர்பான பொருட்களின் அனைத்து இறக்குமதிகள் மற்றும் உள்நாட்டு கொள்வனவுகள், இந்தச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகளிலிருந்து விலக்கு அளிக்கப்படும். |
| 6. சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235) | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரம் தொடர்பான பொருட்களின் மற்றும் சேவைகளின் அனைத்து இறக்குமதிகளும், இந்தச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகளிலிருந்து விலக்கு அளிக்கப்படும். |
| 7. 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரம் தொடர்பான பொருட்களின் அனைத்து இறக்குமதிகளும், இந்தச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகளிலிருந்து விலக்கு அளிக்கப்படும். |
| 8. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரம் தொடர்பான பொருட்களின் அனைத்து இறக்குமதிகளும், இந்தச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வரிகள், தீர்வைகள் மற்றும் அறவீடுகளிலிருந்து விலக்கு அளிக்கப்படும். |
| 9. 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பந்தய மற்றும் சூதாட்ட விதிப்பனவுச் சட்டம் | இந்த சட்டத்தின் கீழ் விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்பு எதுவும் வழங்கப் படமாட்டாது. |
| 10. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | இந்தச் சட்டத்தின் அனைத்து ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். |
| 11. கேளிக்கை வரி கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 267) | இந்த சட்டத்தின் கீழ் விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்பு எதுவும் வழங்கப் படமாட்டாது. |
| 12. 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி சட்டம் | 2022 யூன் 3 ஆந் திகதிய 2282/59 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (கொழும்புத் துறைமுக நகரத்தில் முதலீடுகள்) ஒழுங்குவிதிகள் நீங்களாக இச்சட்டத்தின் அனைத்து ஏற்பாடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். |
| 13. 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம் | இந்த சட்டத்தின் கீழ் எந்த விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்பு வழங்கப்படமாட்டாது. |

## அட்டவணை IV

### வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களின் செல்லுபடியாகும் காலம்

| சட்டத்தின் அட்டவணை II இல் பட்டியலிடப்பட்டவாறான சட்டவாக்கங்கள் | ஆரம்பிக்கின்ற திகதி | முடிவடைகின்ற திகதி |
|---|---|---|
| 1. 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் | 2024 ஒக்றோபர் 1 | 2059 செப்தெம்பர் 30 |
| 2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டம் | 2024 ஒக்றோபர் 1 | 2049 செப்தெம்பர் 30 |
| 3. 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டம் | 2024 ஒக்றோபர் 1 | 2049 செப்தெம்பர் 30 |
| 4. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச்சட்டம் | 2024 ஒக்றோபர் 1 | 2049 செப்தெம்பர் 30 |
| 5. 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க கலால் வரி(விசேட ஏற்பாடுகள்) சட்டம் | 2024 ஒக்றோபர் 1 | 2049 செப்தெம்பர் 30 |
| 6. சுங்கக் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 235) | 2024 ஒக்றோபர் 1 | 2049 செப்தெம்பர் 30 |
| 7. 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் | 2024 ஒக்றோபர் 1 | 2049 செப்தெம்பர் 30 |
| 8. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் | 2024 ஒக்றோபர் 1 | 2049 செப்தெம்பர் 30 |
| 9. 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பந்தய மற்றும் சூதாட்ட விதிப்பனவுச் சட்டம் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 10. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | 2024 ஒக்றோபர் 1 | 2049 செப்தெம்பர் 30 |
| 11. கேளிக்கை வரி கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 267) | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 12. 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி சட்டம் | 2024 ஒக்றோபர் 1 | 2049 செப்தெம்பர் 30 |
| 13. 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |

EOG 09-0141

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.